ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ அருத்தபஞ்சகம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ அருத்தபஞ்சகம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡அமலன் அவியாத சுடர்⋆ அளவில்லா ஆர் அமுதம்⋆
அமல உருக் குணங்கள்⋆ அணி ஆயுதங்கள் அடியவர்கள்⋆
அமல அழியாத நகர்⋆ அழிந்தெழும் காவுடன் எல்லாம்⋆
கமலையுடன் அரசாளும்⋆ கரிகிரி மேல் காவலனே (1)

உள்ள பொருள் அனைத்துக்கும்⋆ உருவ நிலை கருமங்கள்⋆
தெள் இசைவின் வசம் ஆக்கித்⋆ திகழ்ந்துயிராய் உறைகின்றான்⋆
நள் இருள் தீர்த்தடியவர்க்கு⋆ நலங்கொடுக்கும் திருவுடனே⋆
வள்ளல் அருளாளர் எனும்⋆ வாரண வெற்பிறையவனே (2)

பூத உடல் புலன்கள் மனம்⋆ புல் ஆவி புந்தி எனும்⋆
யாதும் அலனாய் இலகி⋆ யான் எனும் இன் நுண் அறிவாய்ச்⋆
சேதனனாய் அடிமையுமாய்⋆ உயிர்க்கெல்லாம் திண் உயிராய்த்⋆
தீதல் இன்றித் திகழும் சீர்⋆ அத்திகிரித் திருமாலே (3)

தான் அடைத்த குணம் கருவி⋆ தன் கிரிசை வழி ஒழுக்கி⋆
ஊன் எடுத்துண்டுமிழ்ந்துழலும்⋆ உயிர்க்கெல்லாம் உயிர் ஆகிக்⋆
கான் நடத்திக் கமலையுடன்⋆ கண்டுகந்து விளையாடும்⋆
தேன் எடுத்த சோலைகள் சூழ்⋆ திரு அத்தி ஊரானே (4)

உய்யும் உறவிசையாதே⋆ ஒத்தவர்க்கே அடிமையுமாய்ப்⋆
பொய் உருவைத் தமக்கேற்றிப்⋆ புலன் கொண்ட பயனே கொண்டு⋆
ஐ உறவும் ஆர் இருளும்⋆ அல்வழியும் அடைந்தவர்க்கு⋆
மெய் அருள் செய்திடும் திருமால்⋆ வேழ மலை மேயவனே (5)

www.prapatti.com

விதைமுளையின் நியாயத்தால்⋆ அடி இல்லா வினை அடைவே⋆
சதை உடல நால் வகைக்கும்⋆ சரண் அளிப்பான் எனத் திகழ்ந்து⋆
பதவி அறியாது⋆ பழம் பாழில் உழல்கின்றார்க்கும்⋆
சிதைவில் அருள் தரும் திருமால்⋆ திரு அத்தி நகரானே (6)

எம நியம ஆசனங்கள்⋆ இயல் ஆவி புலன் அடக்கம்⋆
தமதறியுந் தாரணைகள்⋆ தாரை அறா நினைவொழுக்கம்⋆
சமம் உடைய சமாதி நலம்⋆ சாதிப்பார்க்கிலக்காகும்⋆
அமரர் தொழும் அத்திகிரி⋆ அம்புயத்தாள் ஆர் அமுதே (7)

புகல் உலகில் இல்லாது⋆ பொன் அருள் கண்டுற்றவர்க்கும்⋆
அகலகிலா அன்பர்க்கும்⋆ அன்றே தன் அருள் கொடுத்துப்⋆
பகல் அதனால் பழம் கங்குல்⋆ விடிவிக்கும் பங்கயத்தாள்⋆
அகலகிலேன் என்றுறையும்⋆ அத்திகிரி அருள் முகிலே (8)

இரு விலங்கு விடுத்து⋆ இருந்த சிறை விடுத்தோர் நாடியினால்⋆
கரு நிலங்கள் கடக்கும் வழி⋆ காவலரால் கடத்துவித்துப்⋆
பெரு நிலம் கண்டுயிருணர்ந்து⋆ பிரியாமல் அருள் செய்யும்⋆
உரு நலம் கொண்டுறும் திருவோடு⋆ உயர் அத்திகிரியானே (9)

‡தம் திருமாதுடனே தாம்⋆ தனி அரசாய் உறைகின்ற⋆
அந்தம் இல் பேர் இன்பத்தில்⋆ அடியவரோடெமைச் சேர்த்து⋆
முந்தி இழந்தன எல்லாம்⋆ முகிழ்க்கத் தந்தாட்கொள்ளும்⋆
அந்தம் இலா அருள் ஆழி⋆ அத்திகிரித் திருமாலே (10)

‡அயன் பணியும் அத்திகிரி⋆ அருளாளர் அடியிணைமேல்⋆
நயங்கள் செறி கச்சி நகர்⋆ நான் மறையோர் நல் அருளால்⋆
பயன்கள் இவை அனைத்தும் எனப்⋆ பண்டுரைத்தார் படி உரைத்த⋆
வியன் கலைகள் ஈர் ஐந்தும்⋆ வேதியர்கட்கினியனவே (11)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com